**அரசாங்கஅறிவித்தல்**

**1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க,உற்பத்தி (விசேடஏற்பாடுகள்) சட்டம்**

**3 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க,உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ்,எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் 2016.04.29 ஆந் திகதிய 1964/70 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் மேற்குறித்த கட்டனையின் கீழ் வெளியிடப்பட்ட அட்டவணையினை, இதனகத்துக்குப் பின்னர் உள்ளவாரான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கின்றேன்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2016, மே மாதம் 18 ஆந் திகதி

**அட்டவணை**

2016.04.29 ஆந் திகதிய 1964/70 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள அட்டவணையின் I (ஈ) விடயத்திற்கு உடன் அடுத்து கீழ் வரும் விடயங்களைப் உட்புகுத்துவதன் மூலம்.

| இல I | | விடயம் II | உற்பத்திதீர்வை III |
|---|---|---|---|
| 1 | (உ) | இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம்:<br>இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் நாட்டுக்காக அளப்பரிய சேவையினை வழங்கியுள்ளார் என சான்றுப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள் ஒருவரினால்: அல்லது அத்தகைய நபர்களுக்கு பரிசளிக்கப்பட்ட வாகனம்<br>2015.11.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சலுகை வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டும், 2015.12.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் திருத்தப்பட்டும், இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், | 2015.02.26 ஆந் திகதிய 1903/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் அவற்றிற்கு நேரொத்த பதிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதம் |